# பாக்குநீரிணையில் மீனவர்களுக்கு ஏற்படும் இடையூறுகள்

வரலாற்றுக்காலம் தொட்டு தமிழர்கள் இந்தியக் கண்டமேடையில் மீன் பிடித்தலில் இருந்து முத்துக்குளித்தல் வரை எவ்வித இடையூறுகளும் இல்லாது செய்து தமது நெய்தல் வாழ்வை செவ்வனே செய்து வளம் பெற்றனர். தமிழகமும் இலங்கையும் ஆங்கிலேயரிடம் பறிபோகுமுன்னர் இராமநாதபுர மன்னர் ஆட்சி இலங்கையின் வடபால் உள்ள தீவுகள் அடங்கலாக இருந்தது.

ஆங்கிலேயர் ஆட்சிக்குப் பின் அமைந்த மத்திய அரசின் ஆட்சியும் தமிழக மீனவர்களுக்கும், வட இலங்கை மீனவர்களுக்கும் மீன்பிடி எல்லையில் வரையறையை இட்டுள்ளது. இதற்காக 1974ம் ஆண்டு கடல் எல்லை உடன்பாடு தமிழக மக்களின் அங்கீகாரமின்றி இந்திய மத்திய அரசினால் இலங்கையுடன் மேற்கொள்ளப்பட்டது. இப்வொப்பந்தத்தினால் தமிழக மீனவர்கள், தமிழ் வணிகர்கள் பெரும்பாலும், பாதிக்கப்பட்டனர். இயல்பாகவே தாய்க்கடலில் வாழ்ந்த மக்கள் எதிரியாகவும், சட்டவிரோதிகளாகவும் மாற்றப்பட்டனர். இதனால் பல ஆயிரக்கணக்கான மீனவர்கள் கடலுடன் சங்கமமாகினர்.

இந்திய மீனவர்கள் இலங்கைக் கடல் எல்லைக்கு எல்லை தாண்டி வருவதற்குப் பல காரணங்கள் உள்ளது. கடலில் குறிப்பாக கொந்தளிப்பாக அலை உள்ளபோது எல்லைகளை முற்றுமுழுதாக வரையறுக்க முடியாது. மீனவர்கள் தமது கடல் தொழிலைக் கடலில் மேற்கொள்ளும்போது தமது பாங்கில் தொழில்புரிய மூன்று விதமான காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. அவை தள்ளுங் காரணிகள், தடுப்புக் காரணிகள், கவரும் காரணிகள் ஆகும்.

இந்திய எல்லையிலிருந்து விலகி கடற்றொழில் செய்வதற்கான தள்ளுங் காரணிகள்.

## தள்ளுங்காரணி ஒன்று

இந்திய கடற்கரையை ஒட்டி கல்பாக்கம், கூடங்குளம் அணுமின் உற்பத்தி நிலையங்கள், அமைந்து உள்ளதனால் அவற்றின் கதிர்வீச்சின் தாக்கம் இந்தியக் கரையில் இருந்து தூரம் அதிகரிக்க குறைகின்றது. இதனால் கடல்வாழ் பிளாங்டன் செறிவும், இந்தியக் கரைகளில் குறைவாகவும், இலங்கை நோக்கி அதிகமாகவும் அமைகின்றது. இதனால் மீன்வளமும் இலங்கைக் கரையை நோக்கி அதிகமாக உள்ளது.

**தள்ளுங்காரணி இரண்டு**

காலநிலை மாற்றம் பூகோள வெப்பநிலையை அதிகரித்து உள்ளது. இலங்கை இந்திய கடல் எல்லை தொடர்பான கச்சதீவு ஒப்பந்தம் 1974ம் ஆண்டுக்குரியது. சுமார் 45 வருடங்களுக்குப் பின் பூகோள வெப்பநிலை மாற்றத்தால் கடல் நீரோட்டத்தில் பாரிய மாற்றம் ஏற்பட்டுள்ளது. குறிப்பாக எல்நிறோ காரணமாக கடல் அலைகளின் கெல்வின் அலைகளில் பாரிய தாக்கம் ஏற்பட்டுள்ளது. இதனால் மீனவர்களின் படகுகள் எல்லைதாண்டி செல்லும் நிலை அதிகளவில் ஏற்பட்டுள்ளது. எனவே கச்சதீவு ஒப்பந்தத்தை மீள் ஆய்வுக்கு உட்படுத்த வேண்டிய தேவை தற்போது உள்ளது. மேலும் பூகோள வெப்பமாதல் கடல்வாழ் உயிரினங்களிலும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது. இது மீனவர்களின் வாழ்வாதாரத்தை வெகுவாகப் பாதித்து உள்ளது.

**தள்ளுங்காரணி மூன்று**

இந்திய கரையோரங்களில் அடிமட்ட இழுவைவலை மீன்பிடித்தல் அதிகமாகச் செல்வதனால் அங்கு மீன்வளம் குன்றி மீனவர்கள் கடலில் தூர தொழிலுக்குச் செல்லும் நிலை உள்ளது.

**தள்ளுங்காரணி நான்கு**

சட்டவிரோத வர்த்தகம், போதைப்பொருள் கடத்தலில் சில மீனவப்படகுடன் ஈடுபட்டு உள்ளன.

**தள்ளுங்காரணி ஐந்து**

தமிழ் நாட்டில் பொருளாதாரத்தில் மீன்பிடித் தொழில் மிகவும் முக்கியமான இடங்களில் உள்ளமையினால் அதிக அளவில் கடல் தொழில்வளம் பெருக வேண்டிய சூழல் உள்ளது.

அடுத்து இலங்கைக் கரையை நோக்கி மீன்பிடித்தலுக்கான கவரும் காரணிகளை நோக்கலாம்.

**கவருங்காரணி ஒன்று**

தமிழ் நாட்டுடன் ஒப்பிடும்போது வட இலங்கையின் மீனவத் தொழில் செய்வோர் தொகை வெகுவாகக் குறைந்து விட்டது. குறிப்பாகக் கடந்த 40

வருடகாலத்தில் மீனவக் குடும்பங்களே பல உயிரிழப்புக்களை யுத்தத்தினாலும், கடல் கோள்களினாலும் வட இலங்கையில் சந்தித்துள்ளது.

**கவருங்காரணி இரண்டு**

வட இலங்கை மீனவர்களுக்கு மீன்பிடித்தலுக்கான ஆதரவு வசதிகள் குறைவு. குறிப்பாக மீன்பிடித் துறைமுகங்கள் முற்றாக விஸ்தரிக்கப்படவில்லை.

**கவருங்காரணி மூன்று**

வட இலங்கை மீனவர்களிடம் பெருமெடுப்பில் மீனவத் தொழில் செய்வதற்கான சமூகமூலதனம் இல்லாத தன்மை, யுத்தத்தினால் ஏற்பட்டுள்ளது.

**கவருங்காரணி நான்கு**

வட இலங்கைக் கடற் பரப்புக்கள் ஒப்பீட்டளவில் இந்திய கடற்பரப்பினை விடக் குறைந்த அளவான அணுமின் கதிர்வீச்சுத் தாக்கத்திற்கு உட்படுவதனால் வடகடலில் உள்ள பிளாங்சன்களில் செறிவு அதிகமாக அமையும்.

**கவருங்காரணி ஐந்து**

வட இலங்கையில் அடிமட்ட இழுவைவலை மீன் பிடித்தல் முற்றாகக் கட்டுப்படுத்தப்பட்டு உள்ளமையால் இங்கு மீன்வளம் அதிகம்.

அடுத்து இலங்கை இந்திய கடல் எல்லைக்குரிய தடுப்புக் காரணிகளாக உள்ளவற்றை ஆராய்தல் வேண்டும்.

**தடுப்புக்காரணி ஒன்று**

இலங்கைக் கடற்படையின் ரோந்துக்காவல்

**தடுப்புக்காரணி இரண்டு**

இந்தியக் கடலோரக் கடற்படையின் ரோந்துப் பணி.

**தடுப்புக்காரணி மூன்று**

இந்தியக் கடற்படையின் ரோந்துப் பணி.

**தடுப்புக்காரணி நான்கு**

இலங்கை அரசின் வெளியுறவுக் கொள்கை.

**தடுப்புக்காரணி ஐந்து**

இந்திய அரசின் வெளியுறவுக் கொள்கை.

**தடுப்புக்காரணி ஆறு**

தமிழக அரசின் மீனவநலன் கொள்கைகள்

**தடுப்புக்காரணி ஏழு**

சர்வதேச சட்டங்களும், கட்டுப்பாடுகளும்.

**தடுப்புக்காரணி எட்டு**

ஈழத்தமிழர் ஏதிலிநிலையும் இனப் பிரச்சினைக்கான தீர்வும்

எனவே தமிழக மீனவர் பிரச்சினை என்பது வெறும் இனரீதியான கண்ணோட்டத்தில் பார்க்காது காலநிலைமாற்றம், அரசியல் மாற்றம், பொருளாதார மாற்றம், சமூகவியல் மாற்றம், இராஜதந்திர மாற்றம் என்பனவற்றிற்கு ஊடாக அணுகல் அவசியம். தொடர்ந்தும் தமிழர் தாய் நெய்தலில் கைதாதலும், காணாமல் போதலும்ச, மரணமாதலும் தவிர்க்கப்படல் வேண்டும்.

மருத்துவர் சி. யமுனாநந்தா